No. of Printed Pages : 7

348657

4301

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் - முதல் தாள்

# Language — Part A — TAMIL — Paper I

(செய்யுள், உரைநடை)

www.tnschools.co.in

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு** - (i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைத்தல் வேண்டும்.

(ii) வினா எண் **49** -விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைத்தல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6x1=6**

**1.** ஏலாதி இந்த நூல்களுள் ஒன்று.

(அ) பதினெண் மேற்கணக்கு

(ஆ) பதினெண் கீழ்க்கணக்கு

(இ) காப்பியம்

**2.** 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாடியவர் :

(அ) கவிமணி (ஆ) பாரதிதாசன் (இ) பாரதியார்

**3.** 'நல்' என்னும் அடைமொழி பெற்ற நூல்

(அ) அகநானூறு (ஆ) நற்றிணை (இ) கலித்தொகை

[ திருப்புக

www.tnschools.co.in

4. இன்றைய மதுரையில்__________தமிழ்ச்சங்கம் இருந்தது.
(அ) மூன்றாம் (ஆ) இரண்டாம் (இ) முதலாம்

5. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது :
(அ) பத்மஸ்ரீ (ஆ) பாரத ரத்னா (இ) பத்மவிபூஷன்

6. வள்ளலாரின் இயற்பெயர் :
(அ) சம்பந்தர் (ஆ) இராமலிங்கர் (இ) தாயுமானவர்

## பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** **6x1=6**

7. திருக்குறள்__________வெண்பாக்களால் ஆன நூலாகும்.

8. கம்பரைப் புரந்தவர்__________.

9. நால்வகைப் பாக்களும் வயலுக்கு__________அமைந்துள்ளன.

10. படப்பிடிப்புக் கருவியை __________பொருத்துவதும் உண்டு.

11. தமிழர்கள் நிலத்தை __________வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.

12. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி__________ .

## பகுதி - 3

**பொருத்துக.** **4x1=4**

13. இடர் - நிலவு

14. நாவாய் - துன்பம்

15. இறை - படகு

16. இந்து - தலைவன்

## பகுதி - 4

**விடைக்கேற்ற வினா அமைக்க.** **4x1=4**

17. நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம்.

18. பேச்சுக்கலையில் வெற்றிபெற வலிமையான கருத்துகள் தேவை.

19. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப்படக்கருவி பயன்படுகிறது.

20. தொழில் நுட்பப்பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** **5x2=10**

21. நன்றிக்கு வித்தாவது எது?

22. ஏலாதி - நூற்குறிப்பு எழுதுக.

23. குகனின் வேண்டுகோள் யாது?

24. மூத்த திருநாவுக்கரசுக்கு நேர்ந்ததென்ன?

25. போலிப் புலவர்களை தண்டிப்போர் யாவர்?

26. வேந்தற்குரிய பொருள்கள் யாவை?

27. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?

[ திருப்புக

பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** 5x2=10

28. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை?

29. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?

30. மொழிமாற்றம் என்றால் என்ன?

31. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?

32. கண்ணிடந்து அப்பியவர் யார்? அவர் வரலாறு உணர்த்தும் செய்தி யாது?

33. சத்திய தருமச்சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?

34. இடைநிலையாசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.

பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** 3x4=12

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?

36. 'சாதனைப் பூக்கள்' என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார்?

37. கம்பராமாயணம் - சிறுகுறிப்பு எழுதுக.

38. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?

39. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

## பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுக்கு எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** 3x4=12

40. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?

42. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.

43. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.

44. உழவுத்தொழில் குறித்து எழுதுக.

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

45. **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5

பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு
    பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு
    காவிரி வளநாடா.
நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
    இவையிவை யுடைநந்தி
மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
    வானகம் ஆள்வாரே.

(i) இக்கலம்பகம் யார் மீது பாடப்பெற்றது?

(ii) முத்துகளைச் சொரிகின்றவை எவை?

(iii) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.

(iv) கவிகை - என்பதன் பொருள் யாது?

(v) வருபுனல், பொழிதருமணி - இலக்கணக் குறிப்பு தருக.

[ திருப்புக

46. **கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5

தமிழினம் தனக்குவமையில்லா ஒரு தனி இனம். தமிழர் நாகரிகம் தன்னிகரில்லா தனி நாகரிகம். தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை, நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர் ; உழவையும், தொழிலையும் மதித்திருந்தனர்; வினையை ஆடவர் உயிராகக் கருதினர். சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர்; விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர்; புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர்; பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர்; ஈந்து உவந்து இன்பம் கண்டனர். இத்தகைய நாகரிகமும் பண்பாடும் மிக்கவராகத் தமிழர் வாழ்ந்தனர்.

(i) தமிழர்களின் நாகரிகம் எத்தகையது?

(ii) தமிழர்களின் சிறந்த பண்புகள் எவை?

(iii) கல்வியின் முடிவு எது?

(iv) புகழ், பழி குறித்து இப்பத்தியில் கூறப்படுவன யாவை?

(v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

## பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** 2x8=16

47. (அ) "தேரா மன்னா" என விளித்து கண்ணகி கூறியன யாவை?

**அல்லது**

(ஆ) பொருள் செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

48. (அ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

**அல்லது**

(ஆ) கலை அறிவியல் கல்வி, சிறு தொழில் கல்வி குறித்து விவரிக்க.

## பிரிவு - VI

49. **செய்யுள் வடிவில் விடையளிக்க.** **2+2+3+3=10**

(அ) 'ஞாலம்' எனத் தொடங்கும் குறள்.

(ஆ) 'கெடும்' என முடியும் குறள்.

(இ) 'மெய்தான்' - எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடல்.

(ஈ) 'மீன்நோக்கும்' - எனத் தொடங்கும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்.

-o0o-